**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.60/2018 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | சின்னசாமி |
| Father's Name/Husband Name: | சிக்ககவுண்டர் |
| Village : | மருதடி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 59/ 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.11.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி முத்துக்கிருஷ்ணன் – ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை. நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 லட்சுமி எனது மனைவி ஆவார். அ.சா.2 பாரத் எனது மகன் ஆவார். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நான் மாலை 6.45 மணியளவில் எங்கள் வீட்டு வாசலின் முன்பு சோப்பு காணவில்லை என எனது மனைவி பொதுவாக திட்டிக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி பின்புறமாக வந்து எனது மனைவியின் மண்டையில் உலக்கையால் அடித்துவிட்டார். நான் அப்போது அங்கு இல்லை. பின்னிட்டு எனது மனைவியை 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு ஏற்றி சென்றதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.60/2018 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | முத்துசாமி |
| Father's Name/Husband Name: | கோணன் |
| Village : | மருதடி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 58/ 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.11.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி முத்துக்கிருஷ்ணன் – ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். தேதி மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் மதியம் 3.00 மணியளவில் நானும், எனது ஊரைச்சேர்ந்த வையாபுரி என்பவரும் எனது ஊரில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே பேசிக்கொண்டிருந்தபோது, பாடாலூர் போலீசார் வந்து சாட்சியாக இருக்கும்படி எங்களை கேட்டுக்டகொண்டதால் நாங்கள் இருவரும் அதில் சாட்சியாக கையொப்பமிட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)போலீசார் விசாரணையில் 05.05.2018ம் தேதிதான் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த வையாபுரியும் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவிலில் பேசிக்கொண்டிருந்தோம்ள ன்றால் சரிதான். அங்கு வந்த போலீசார் லட்சுமி மற்றும் முத்துகிருஷ்ணன் இடையேயான பிரச்சனை சம்பந்தமாக விசாரித்து சம்பவம் இடம் குறித்து மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகஜரில் மேற்படி சம்பவம் இடம் குறித்து எழுதிக்கொண்டு அதில்தான் என்னிடமும், என்னுடன் இருந்த வையாபுரியிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அவ்வாறு தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரி / எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) பார்வை மகஜரை நான் படித்து பார்க்கவில்லை என்றாலும், கையொப்பம் மட்டும் தான் செய்தேன் என்றாலும் சரிதான். நான் சொல்லியது போன்று படம் ஏதும் எங்கள் முன்னிலையில் போடவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.